
2015 தொடக்கப்பள்ளித் தாய்மொழிப் பாடக்கலைத்திட்டம்

# தேன் தமிழ்

## பெற்றோர் கையேடு

(இரண்டாம் பதிப்பு)



© 2015, 2016 Curriculum Planning & Development Division
**Ministry of Education, Singapore**
MOE Building, 1 North Buona Vista Drive, Singapore 138675

**Published by Marshall Cavendish Education**
Times Centre, 1 New Industrial Road, Singapore 536196

First published 2015
Second Edition 2016
All rights reserved.
ISBN 978-981-31-6033-0
Printed in Singapore

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

# முன்னுரை

இருமொழிக் கல்விக்கொள்கை சிங்கப்பூர்க் கல்விமுறையின் முக்கியக் கூறாக இருந்து வருகிறது. பள்ளிகளில் ஆங்கிலம் முக்கியப் பயிற்றுமொழியாக இருக்கிறது. உலகமயமாகிவரும் சூழலில் உலக நாடுகளோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள ஆங்கில மொழி நம் பிள்ளைகளுக்கு உதவுகிறது. தாய்மொழி நம் பிள்ளைகள் மொழியையும் அவரவரது பண்பாட்டையும் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. உலகமயமாகிவரும் இன்றைய சூழலில் பணியிடமாயினும் அன்றாட நடைமுறை வாழ்க்கைச் சூழலாயினும், தாய்மொழியில் திறன் பெற்றிருப்பது கூடுதல் அனுகூலமாக அமையும்.

இருமொழிகளைக் கற்பதனால் பல நன்மைகள் உண்டு. மக்கள் பலரோடு உரையாடவும் பலவற்றைப்பற்றிய பரந்துபட்ட பார்வையைப் பெறவும் இருமொழியாற்றல் வழிவகுக்கும். இருமொழியாற்றலை இளம் வயதிலேயே பெறுதல் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் என ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. இருமொழியாற்றல் பெற்றவர்கள் நெகிழ்வுத்தன்மையுடன் சிந்திப்பவர்களாகவும் கூருணர்வுடையவர்களாகவும் பிறர் கூறுவதை நன்கு செவிமடுப்பவர்களாகவும் இருப்பார்கள். இருமொழியாற்றல் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவதோடு குழந்தைகளின் மனவளர்ச்சியையும் மேம்படுத்தும்.

நம் பிள்ளைகள் தமிழ்மொழியில் திறன்பெற உதவ வேண்டும் என்ற நோக்கத்தோடு கல்வி அமைச்சு, தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம், கற்பித்தல், மதிப்பீடு ஆகியவற்றைப் பிள்ளைகளின் கற்றல் தேவைகளுக்குப் பொருத்தமானவையாக இருப்பதை உறுதிசெய்யும் வண்ணம் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. பிள்ளைகள் தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவதற்குப் பலருடைய முயற்சி தேவைப்படுகிறது. இதற்கு ஆசிரியர்களின் பொறுமையும் வழிகாட்டுதலும் முக்கியம் என்றபோதிலும் பெற்றோரின் ஆதரவும் மிகவும் வேண்டப்படுகிறது.

பிள்ளைகள் வாழும் இடமாகவும் அவர்கள் முதலில் கற்கும் இடமாகவும் திகழ்வது இல்லம் என்பதால் பெற்றோர்களே அவர்களுடைய முதல் ஆசிரியர்கள் ஆவர். ஆதலால், தமிழ்மொழி கற்றலை வீட்டில் தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும். எனவே, பெற்றோர்களுக்கு உதவும் நோக்கில் 2015 தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும் கற்றல் வளங்களையும் அறிமுகப்படுத்தும்வகையில் இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழியைப் பிள்ளைகள் நன்கு கற்கப் பிள்ளைகளுக்குப் பெற்றோர் எவ்வாறெல்லாம் உதவலாம் என்பதற்கான பரிந்துரைகளும் இக்கையேட்டில் இடம்பெற்றுள்ளன.

பள்ளிகளில் பிள்ளைகள் தமிழ்மொழியை எவ்வாறு கற்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவும் பிள்ளைகளின் கற்றலில் பள்ளியுடன் இணைந்து எவ்வாறு துடிப்புடன் செயற்படலாம் என்பதை அறிந்துகொள்ளவும் தமிழ்மொழியைக் கற்கப் பல சுவாரசியமான வழிமுறைகள் உள்ளன என்பதைத் தெரிந்துகொள்ளவும் இந்தக் கையேடு பெற்றோருக்கு உதவும் என நம்புகிறோம். மேலும், எளிமையான, மகிழ்வூட்டக்கூடிய முறையில் தமிழ்மொழியைக் கற்கப் பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவுவார்கள் எனவும் நாங்கள் நம்புகிறோம்.

நாம் நம் பிள்ளைகள் கல்வியை எவ்வளவு விரைவாகத் தொடங்குகிறார்கள் என்பதில் கவனம் செலுத்துவதைவிட அவர்கள் கல்வியில் எந்த அளவுக்குத் தங்கள் இலக்குகளை அடைந்துள்ளார்கள் என்பதில்தான் கவனம் செலுத்த வேண்டும். வலுவற்றதும் அடித்தளமற்றதுமான விரைவான தொடக்கத்தைக் கொண்ட பிள்ளைகள் கல்வியில் நீண்ட தூரம் செல்ல இயலாது. உறுதியான அடித்தளத்துடன் அமையும் நன்கு திட்டமிடப்பட்ட தொடக்கம் அவர்களின் நீடித்த கல்விப் பயணத்தை உறுதி செய்யும்.

- திரு சான் சுன் சிங்

சமூக மற்றும் குடும்ப வளர்ச்சிக்கான அமைச்சர்


2012

# பொருளடக்கம் / Content


அறிமுகம் 1
Introduction 36

பாடநூல்களும் பயிற்றுவளங்களும் 7
Instructional Materials 41


பெற்றோருக்கான குறிப்புகள் 23
Tips for Parents 56

# அறிமுகம்

## தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம்

உங்கள் பிள்ளை தமிழ்மொழியைத் திறமையாகப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் செய்துகொள்ளும் திறன்வாய்ந்தவராக உருவாகும் வகையில் தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம், பாடத்திட்டம், பயிற்றுவளங்கள் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்க வேண்டும் என்பதே இப்பாடக்கலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.



## 1 2015 தொடக்கப்பள்ளிப் பாடக்கலைத்திட்டத்தின் நோக்கம் என்ன?

உங்கள் பிள்ளை தமிழ்மொழியை ஆர்வத்தோடு விரும்பிக் கற்றுப் பிறரோடு தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் பேசத் தேவையான மொழியாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், அவர் தமிழில் தயக்கமின்றித் தம் கருத்துகளைப் பிறருடன் பரிமாறிக்கொள்ளும் திறனையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் உங்கள் பிள்ளைகளால் பொருத்தமான கற்றல் சூழலில் அதிக ஈடுபாட்டுடன் மொழியைக் கற்றுத் திறம்படப் பயன்படுத்தவும் இருவழித்தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவும் முடியும்.




## 2 2015 தொடக்கப்பள்ளித் தாய்மொழிப் பாடக்கலைத்திட்டத்தில் உள்ள புதிய கூறுகள் யாவை?

உங்கள் பிள்ளையின் கருத்துப்பரிமாற்றத் திறனைச் சிறந்த முறையில் வளர்க்க இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் அமைந்த நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் தாய்மொழி கற்றலின்வழிப் பண்பாடு, விழுமியங்கள் ஆகியவையும் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றன.

பாடநூல், பெரிய புத்தகம், சிறுவர் கதைநூல், தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்கள் ஆகியவற்றில் சில கற்பனைக் கதைமாந்தர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். உங்கள் பிள்ளையைத் தாய்மொழி கற்றலில் ஆர்வத்தோடு ஈடுபடுத்த இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் இந்தக் கதைமாந்தர்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

உங்கள் பிள்ளையைக் கற்றலில் ஈடுபடுத்தி மகிழ்வுடனும் பயனுள்ள வகையிலும் தாய்மொழியைக் கற்க உதவுவதற்காக ஒளிக்காட்சிகள், அசைவுப்படக் காட்சிகள், மின்னியல் விளையாட்டுகள் முதலிய தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்கள் வழங்கப்பட்டுள்ளன.



## 3 எழுத்து அறிமுகத்தில் ஏதேனும் மாற்றம் இருக்குமா?

இந்தப் பாடத்திட்டத்திலும் எழுத்து அறிமுகம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும். எழுத்து, சொல் ஆகியவை பாடல்கள், கதைகள், கற்றல் அனுபவங்கள் முதலிய ஏற்புடைய நடவடிக்கைகளின்மூலம் அறிமுகம் செய்யப்படும். எழுத்து அறிமுகத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள கால அளவு ஈடுபாடுமிக்க, புத்தாக்கம் மிகுந்த கற்பித்தல் அணுகுமுறைகள் வாயிலாகக் கருத்துப்பரிமாற்றத் திறனை வளர்க்க வழிவகுக்கும். இவையாவும் சரியான கால அளவைக்கொண்ட கற்றல் சூழலை அமைத்துத் தருவதோடு தமிழ்மொழி கற்றலில் வலுவான அடித்தளத்தையும் ஏற்படுத்தும்.



## 4 புதிய பாடத்திட்டத்தில் பேச்சுத்தமிழ் வலியுறுத்தப்படுகிறதா?

அனைத்து நிலைகளிலும் வகுப்பறைக் கற்பித்தலுக்கும் கருத்துப்பரிமாற்றத்திற்கும் தொடர்ந்து பேச்சுத்தமிழ் பயன்படுத்தப்படும். பேச்சுத்தமிழைப் பயன்படுத்துவதில் தம் ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக்கொள்ள மாணவர்களுக்குத் தொடர்ந்து முறையான பயிற்சிகளும் வாய்ப்புகளும் வழங்கப்படும். இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் பேச்சுத்தமிழில் பேசிப் பயிற்சிபெற ஆசிரியர்கள் மாணவர்களை வழிநடத்துவார்கள்.



## 5 மாறுபட்ட தேவைகளையுடைய தமிழ் மாணவர்களுக்குக் கற்பிக்க எத்தகைய கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன?

2015 தொடக்கப்பள்ளித் தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம் தமிழ் வகுப்பறைகளில் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் முறைகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கிறது. வெவ்வேறு திறன்களுடன் பலதரப்பட்ட வீட்டுச் சூழல்களிலிருந்து வரும் மாணவர்களின் பல்வேறுபட்ட தொடங்குநிலைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் தொடங்குநிலைகளைக் கருத்திற்கொண்டு அடிப்படை மொழித்திறன்களை வளர்க்க வாய்மொழிச் சொல்வளமும் வாக்கிய அமைப்புமுறையும் அவர்களுக்கு முறையாகக் கற்பிக்கப்படும்.

## 6 ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குச் செல்லும்போது இயல்பான எழுத்துத் திறன் மேம்பாடு எவ்வாறு உறுதிசெய்யப்படுகிறது?

2015 தொடக்கப்பள்ளித் தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டத்தில் எழுதுதல், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் ஆகிய இரண்டு திறன்களையும் மேம்படுத்தப் பொருத்தமான நடவடிக்கைகளும் பயிற்சிகளும் இணைக்கப்பட்டுள்ளன. தொடக்கநிலை ஒன்றிலும் இரண்டிலும் எழுத்து அறிமுகம் இடம்பெற்றாலும் சொற்கள், தொடர்கள், சிறு வாக்கியங்கள் எனப் படிநிலை வளர்ச்சியாக எழுத்துவரைவு மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும். இரண்டாம் ஆண்டின் இறுதித் தவணையில் மாணவர்கள் சிறு வாக்கியங்களை உருவாக்க அறிந்துகொள்வர். தொடக்கநிலை மூன்றில், 40 சொற்களுக்குள் ஒரு கட்டுரையை எழுதும் வகையில் ஆசிரியரின் துணையுடன் படிப்படியாகக் கட்டுரைப் பயிற்சி அளிக்கப்படும். மேல்நிலையில், மாணவர்களின் எழுத்துத்திறனை வளப்படுத்தவும் அவர்களுக்கு ஆர்வமூட்டவும் அவர்களின் மொழி ஆற்றலை மேம்படுத்தவும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், குறிப்பாக இருவழித்தொடர்புத் தளம் அதிக அளவில் பயன்படுத்தப்படும்.




# பாடநூல்களும் பயிற்றுவளங்களும்

**1** புதிய பாடநூல் வரிசைக்குத் தேன் தமிழ் என்னும் பெயர் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது?



தமிழ், தேன் போன்று இனிமையான மொழி. மாணவர்கள் அதனை மகிழ்வுடன் கற்று இன்புற வேண்டும் என்னும் நோக்கில் இப்பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**2** உங்கள் பிள்ளை என்னென்ன திறன்களை வளர்த்துக்கொள்வார்?





உங்கள் பிள்ளை நான்கு அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் ஆகிய கருத்துப்பரிமாற்ற மொழித்திறன்களில் தகுந்த பயிற்சிகளைப் பெறுவார்கள்.





தொடக்கநிலை ஒன்று, இரண்டு வகுப்புகளில் பிள்ளைகள் தங்கள் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ளப் பல நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். பின்னர்ப் படிப்படியாக எழுத்துத் திறனில் பயிற்சி பெறுவார்கள்.



உங்கள் பிள்ளை தமது எண்ணங்களையும் கருத்துகளையும் இயல்பான வாழ்க்கைச் சூழல்களில் பயன்படுத்தக் கற்றுக்கொள்வார். இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களிடம் தம் கருத்துகளை வெளிப்படுத்த இந்தத் திறன் உதவும்.





## 3 பாடநூலில் என்னென்ன உள்ளன?

இந்தப் பாடநூல் வரிசையில் ஐந்து சிறுவர்கள் முக்கியக் கதைமாந்தர்களாக அறிமுகம் காண்கிறார்கள். இவர்கள் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்கு உயிரூட்டுவார்கள்; கற்றலில் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டுவார்கள்; கல்விப்பயணத்தில் உங்கள் பிள்ளையோடு இணைந்து செயற்படுவார்கள்.







1A முதல் 2B வரை ஒவ்வொரு பாடநூலிலும் மொத்தம் 14 பாடங்கள் இருக்கின்றன. 3A, 3B ஆகிய பாடநூல்களில் களங்கள் அடிப்படையில் ஒவ்வொரு பாடநூலிலும் 5 தொகுதிகள் இடம்பெற்றிருக்கின்றன. துணைக்கருவிகள் இப்பாடங்களில் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன. அவை யாவை என்பதைக் காட்டும் குறியீடுகளும் அவற்றின் விளக்கமும் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.







இந்தத் தொடரில் முதல் இரண்டு பாடங்கள் கேட்டல், பேசுதல் திறன்களை வளர்க்கும் அறிமுகப் பாடங்களாக அமைந்திருக்கின்றன. இவை உங்கள் பிள்ளைக்கு மிகவும் நெருங்கிய, தொடர்புடைய தலைப்புகளில் அமைந்திருக்கின்றன.




தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேசவும் எழுதவும், சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும் படித்தல் திறன் அவசியம்.

உங்கள் பிள்ளை தமிழ் எழுத்துகளை அடையாளங்கண்டு சரியாக உச்சரித்துப் படிப்பதோடு அவ்வெழுத்துகளால் அமையும் சொற்களையும் தொடர்களையும் பொருளுணர்ந்து படிப்பார்.

எழுத்து, சொல் ஆகியவற்றின் அறிமுகம் சூழமைவு சார்ந்து இருக்கும். சூழமைவுகள் அனைத்தும் இயல்பான வாழ்க்கைச் சூழலைச் சித்திரிக்கும் வகையிலும் உங்கள் பிள்ளையின் அனுபவத்திற்கு உட்பட்டவையாகவும் அமைந்திருக்கும்.





உங்கள் பிள்ளை தன்னம்பிக்கை, சுயமாகக் கற்றுக்கொள்ளும் திறன், சிந்தனைத் திறன் போன்றவற்றைப் பெறுவதற்கு இருபத்தோராம் நூற்றாண்டுத் திறன்கள் மிகவும் அவசியம். இவை மொழிப்பாட நடவடிக்கைகளோடு இணைத்துக் கற்பிக்கப்படும்.

எனவே, உங்கள் பிள்ளை மொழித்திறன்களைக் கற்பதோடு பிற திறன்களையும் கற்றுக்கொள்வார்.



இந்தத் தொடரில் நிறையப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பாடல்கள் அனைத்தும் அசைவுப்படக் காட்சிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. கதைகள் பல்வேறு திறன்களை வளர்க்க உதவுவதோடு விழுமியங்களைக் கற்பிக்கப் பெரிதும் துணைபுரியும். இந்தத் தொடரில் நிறைய மரபுவழிக் கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கதைகளும் அசைவுப்படக் காட்சிகளாக வழங்கப்பட்டுள்ளன.












இந்தப் பாடக்கலைத்திட்டத்தின் முக்கியப் பரிந்துரைகளில் ஒன்று மொழியைப் பயன்பாட்டு நிலையில் கற்பித்தலாகும். எழுத்து, பிறகு சொல், பிறகு தொடர், பிறகு வாக்கியம் எனச் சொல்லிலிருந்து தொடர் உருவாவதும் தொடர் வாக்கியமாவதும் படிப்படியாக இணைக்கப்பட்டுள்ளன. உச்சரிப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலும் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



மதிப்பீட்டையும் பாடங்களையும் பிரித்துப் பார்க்க முடியாது. முழுமையான கற்றலுக்குத் துணைபுரியும் முழுமையான மதிப்பீடு பாடநூலிலும் பயிற்சிநூலிலும் சேர்க்கப்பட்டுள்ளது. சுய மதிப்பீடு, பெற்றோர் மதிப்பீடு முதலியவையும் இதில் அடங்கும். உங்கள் பிள்ளை தம்முடைய திறன் வளர்ச்சியைத் தாமே அறிந்துகொள்ள 'என்னால் முடியும்' என்னும் வாக்கியங்கள் ஆங்காங்கே சேர்க்கப்பட்டுள்ளன. உங்கள் பிள்ளை ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் இவற்றைப் புரிந்துகொண்டு புட்குறியிட்டுத் தம் திறனை அளவிட்டறிவார்.






## எண் எழுத்து இகழேல்

உங்கள் பிள்ளைக்குத் தொடக்கநிலை இரண்டு முதல் செய்யுள்கள் கற்பிக்கப்படும். கதைகள்வழிச் செய்யுள்களின் பொருளை விளக்கி அவற்றை மனத்தில் பதியச் செய்வதோடு அவை உணர்த்தும் விழுமியங்களும் உங்கள் பிள்ளைக்குக் கற்பிக்கப்படும்.

## 4 பயிற்சிநூலில் என்னென்ன உள்ளன?

பயிற்சிநூலில் முதல் இரண்டு பாடங்களுக்கான பயிற்சிகள் கேட்டல், பேசுதல் ஆகிய திறன்களை அடிப்படையாகக்கொண்டு அமைந்தவை. இவை உங்கள் பிள்ளைக்கு மிகவும் நெருக்கமான தலைப்புகளில் அமைந்திருக்கும். இவற்றின்மூலம் விழுமியங்களும் கற்பிக்கப்படும்.

பயிற்சிநூலில் இடம்பெற்றுள்ள பயிற்சிகள் யாவும் எளிமையிலிருந்து கடினத்திற்கு இட்டுச் செல்லும் வகையில் அமையப்பெற்றிருக்கும். எல்லாத் திறன்களும் அடிப்படையிலிருந்துதான் தொடங்கும். இவற்றின் படிநிலை வளர்ச்சியை உங்களால் காண இயலும்.

மொழியின் தன்மையை நன்கு புரிந்துகொள்ள உதவும் வகையில் பயிற்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இரு வேறு எழுத்துகளில் தொடங்கும் ஒரே மாதிரியான ஒலிப்புடைய சொற்கள், ஒரு சொல்லிலிருந்து ஓர் எழுத்தை நீக்கினால் வேறொரு சொல் உருவாதல் போன்ற பயிற்சிகள் மொழியை ஆர்வமூட்டும் வகையில் படிக்க உங்கள் பிள்ளைக்குத் துணைபுரியும்.



இந்தத் தொடரில் எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம், பகுதி எனப் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் கருத்துணர்திறனை வளர்க்கும் பயிற்சிகளும் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு முன்னோட்டமாக அமையக்கூடிய பயிற்சிகளும் 2A பயிற்சிநூலில் கொடுக்கப்பட்டிருக்கும்.



பயிற்சி 6.4 தேதி: ________

**படங்களைப் பார்த்து வாக்கியங்களை வரிசைப்படுத்து.**

(அ)

1 2 3

- அங்கே இருவரும் பட்டம் விட்டார்கள். ◯
- மாறன் பட்டம் செய்தான். ◯
- அவன் அன்பனுடன் பூங்காவுக்குச் சென்றான். ◯

29

(ஆ)

4 5 6


- மாறன் மரத்தில் ஏறினான். ◯
- காற்று வீசியதால் பட்டம் பறந்து சென்றது. ◯
- பட்டம் மரத்தில் சிக்கியது. ◯

புட்குறி (✓) இடு.

என்னால் வாக்கியங்களைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். ☐

30

முன்னுணர்வுக் கருத்தறிதல், கருத்தறிதல், கட்டுரை ஆகியவற்றுக்குத் தயார்செய்யும் வகையில் முறையான படிநிலை வளர்ச்சியுடன்கூடிய பயிற்சிகள் 2B பயிற்சிநூலில் கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் பிள்ளை இத்தகைய பயிற்சிகளைச் சுயமாகச் செய்வதற்குப் போதுமான பயிற்சிகளைப் பெறுவார்.



பயிற்சி 6.3 தேதி: ________

**சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோட்டில் எழுது.**

அது | பள்ளிக்கு | விளையாடுவாள்

அமுதா வளர்க்கும் நாய்க்குட்டியின் பெயர் பாலு. அமுதா ஓய்வு நேரத்தில் பாலுவுடன் (1)________________.


பாலுவுக்கு அமுதாவை மிகவும் பிடிக்கும். அமுதா (2)________________ சென்றதும் பாலு கவலையோடு இருக்கும். (3)________________ அவளுக்காகக் காத்திருக்கும்.

அமுதா வீட்டுக்கு வந்ததும் பாலு வாலை ஆட்டும். மாலையில் அமுதா பாலுவைப் பூங்காவுக்கு அழைத்துச் செல்வாள்.

புட்குறி (✓) இடு.

என்னால் வாக்கியங்களைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். ☐

31


பயிற்சி 10.3 தேதி: ____

**கவனமாகப் படி.**

இடைவேளை மணி ஒலித்தது. வகுப்பில் இருந்த மாணவர்கள் உணவகத்துக்குச் சென்றார்கள். அவர்கள் வரிசையில் நின்று உணவு வாங்கினார்கள். ஆனால், பாரி மட்டும் வரிசையில் நிற்காமல் உணவை வாங்கச் சென்றான். உணவுக் கடைக்காரர் பாரியை வரிசையில் நிற்கச் சொன்னார். அவன் தன் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டான். பிறகு, வரிசையில் போய் நின்று உணவை வாங்கினான்.

புட்குறி (✓) இடு.

என்னால் பகுதியைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். ☐

52

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து வட்டத்தில் புட்குறி (✓) இடு.**

1. இடைவேளையின்போது மாணவர்கள் எங்கே சென்றார்கள்?
   - ○ வகுப்புக்கு
   - ○ உணவகத்துக்கு
2. மாணவர்கள் எதற்காக வரிசையில் நின்றார்கள்?
   - ○ உணவை வாங்குவதற்கு
   - ○ உணவைச் சாப்பிடுவதற்கு
3. பாரியை வரிசையில் நிற்கச் சொன்னவர் யார்?
   - ○ கடைக்காரர்
   - ○ மாணவர்

53

மேலும் தொடக்கநிலை மூன்று முதல் முன்னுணர்வுக் கருத்தறிதல், கருத்தறிதல், கட்டுரை ஆகிய பயிற்சிகளோடு எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றப் பயிற்சிகளும் பயிற்சிநூலில் இடம்பெற்றிருக்கும். எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றப் பயிற்சிகளின்வழி வாழ்த்துச் செய்திகள், குறுஞ்செய்திகள், சிறு குறிப்புகள் முதலியவற்றின் மூலம் தம் சொந்தக் கருத்துகளை வெளிப்படுத்த உங்கள் பிள்ளை அறிந்துகொள்வார்.

இந்தத் தொடரில் கேட்டல் கருத்தறிதல் பயிற்சிகளுடன் நோக்கல் கருத்தறிதல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உங்கள் பிள்ளை கூர்ந்து கேட்கவும் காட்சியைப் பார்த்துக்கொண்டே கேட்கவும் இவை உதவும்.




பயிற்சிநூலின் இறுதியில் படித்த சொற்களால் அமைந்த சொல் விளையாட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றைப் பாடத்திருப்பம் செய்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## 5 கையெழுத்துப் பயிற்சிநூலில் என்னென்ன உள்ளன?








எழுதுதல் பயிற்சிக்கு மிகவும் அடிப்படையானது தசைப்பயிற்சிகள். அதனால், தசைப்பயிற்சிகளுடன் பாடம் தொடங்குகிறது.

பின்னர், தசைப்பயிற்சிக்கு உதவும் பல்வேறு வகையான கோடுகளை வரையும் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.




உங்கள் பிள்ளைக்கு அதிகம் சலிப்பு ஏற்படாதவாறு கையெழுத்துப் பயிற்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கெனப் பயிற்சிகளுடன் சுவாரசியமான நடவடிக்கைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளை உங்கள் பிள்ளை மகிழ்வுடன் செய்வார்.

## 6 இன்னும் என்னென்ன பயிற்றுவளங்கள் உள்ளன?


எழுத்து, சொல் முதலியவற்றை அறிமுகம் செய்வதற்காகவும் மாணவர்களிடம் தெளிவாகவும் சரளமாகவும் பேசுவதற்கான திறனை வளர்ப்பதற்காகவும் பட அட்டைகளும் மின்னட்டைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**மின்னட்டைகள்**

வணக்கம்

அம்மா

**பட அட்டைகள்**








மேலும், சிறுவர் கதைநூல்களும் பெரிய புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. உங்கள் பிள்ளை ஆசிரியரின் உதவியுடன் இவற்றைப் படிப்பார். கதைகளின்வழி விழுமியங்களைக் கற்றுக்கொள்வதோடு சில வினாக்களைப்பற்றிக் கருத்துப்பரிமாறிக்கொள்வது, பாத்திரமேற்று நடிப்பது, கேட்ட கதையை மீண்டும் கூறுவது போன்ற திறன்களையும் வளர்த்துக்கொள்வார்.

## சிறுவர் கதைநூல்




## பெரிய புத்தகம்




படித்த எழுத்துகளையும் சொற்களையும் உங்கள் பிள்ளை எளிதில் நினைவில் வைத்துக்கொள்ள உதவுவதற்கென விளையாட்டுப் பலகைகளும் அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. உங்கள் பிள்ளை இவற்றை வகுப்பில் பயன்படுத்தி மகிழ்வார். உச்சரிப்பின் முக்கியத்துவத்தைக் கற்பிக்க நாப்பிறழ் பயிற்சிக்கான அட்டைகளும் அவற்றின் பின்புறத்தில் அந்தந்த எழுத்துகளோடு தொடர்புடைய விளையாட்டுகளும் தரப்பட்டுள்ளன.



## 7 தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை எங்கே காணலாம்?

தேன் தமிழ் இணையப்பக்கத்தில் மாணவர்களுக்கெனப் பல பயிற்றுவளங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பாடல்கள், கதைகள், ஒளிக்காட்சிகள், எழுத்துப் பலகை, கேட்டல் கருத்தறிதல், விளையாட்டு, மின்னிலக்கப் பக்கங்கள், ஆவணங்கள் முதலியவை அடங்கும்.

பெற்றோர் http://sangamam.moe.edu.sg/tamilosai/slot/u113/web/primary.html என்னும் இணையத்தளத்திற்குச் சென்று பாடல்கள், கதைகள், எழுத்துப் பலகை, விளையாட்டு, மின்னிலக்கப் பக்கங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளைக்குக் கற்பிக்கலாம்.



# பெற்றோருக்கான குறிப்புகள்

## பிள்ளைகளின் தமிழ்மொழி கற்றலில் பெற்றோரின் பங்கு என்ன?

பெற்றோர் ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளின் தமிழ்மொழி கற்றலில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். பெற்றோர் என்ற முறையில் நீங்கள் உங்கள் பிள்ளையின் தமிழ் கற்றலின்பால் காட்டும் அக்கறை உங்கள் பிள்ளையிடத்தில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தும். நீங்கள் ஆக்ககரமான மனப்போக்கைக் கையாளுவதன்மூலமும் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தித் தருவதன்மூலமும் உங்கள் பிள்ளையின் தமிழ்மொழி கற்றலுக்குப் பெரிதும் உதவலாம்.

நீங்கள் உங்கள் பிள்ளைக்கு முன்மாதிரியாக இருந்து அவரை ஊக்கப்படுத்தித் தமிழ்மொழி கற்றலுக்கு ஆதரவளிக்கலாம்.



## உங்கள் பிள்ளைக்கு ஊக்கமளிப்பவர் என்னும் முறையில்...

### உங்கள் பிள்ளையுடன் உரையாடுங்கள்.

உங்கள் பிள்ளையுடன் கூடுமானவரை தமிழில் உரையாடும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அவருடைய மனத்தில் தோன்றும் எண்ணங்களைத் தமிழில் வெளிப்படுத்த ஊக்கமளியுங்கள். நாளடைவில் உங்கள் பிள்ளை தம் அன்றாட வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடன் தமிழ்மொழியைப் பயன்படுத்த இத்தகைய முயற்சிகள் வழிவகுக்கும்.



### உளவியல் அடிப்படையில் ஆதரவளியுங்கள்.

தமிழில் பேச முயலும்போதும் பேசும்போதும் நீங்கள் உங்கள் பிள்ளையைத் தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்துங்கள்.

### உள்ளார்ந்த தன்முனைப்பை ஊக்குவியுங்கள்.

தமிழ்மொழியின்பால் ஈர்ப்பை ஏற்படுத்த உங்கள் பிள்ளை தமிழை அறிந்துகொள்ளவும் மகிழ்வுடன் கற்றுக்கொள்ளவும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள்.



### மகிழ்வுடன் ஈடுபடுங்கள்.

தமிழ்மொழி கற்றல் என்பது உங்கள் பிள்ளைக்குச் சுகமான பயணமாக அமையப் பண்பாட்டு நடவடிக்கைகளிலும் பாரம்பரிய நிகழ்வுகளிலும் உங்கள் பிள்ளையை ஈடுபடுத்துங்கள். இதன்மூலம் இயல்பான கற்றல் சூழலை அமைத்துத்தர நீங்கள் உதவலாம்.

## உங்கள் பிள்ளைக்கு ஒரு முன்மாதிரி என்னும் முறையில்...

**மொழியைப் பயன்படுத்துங்கள்.**

உங்கள் பிள்ளையுடன் தமிழ்மொழியில் பேசக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். பிள்ளைகள் பாடல்களையும் பாடுவதையும் அதிகம் விரும்புவார்கள். இவை தமிழ்மொழி கற்றலை மகிழ்ச்சிமிக்கதாக்கப் பெரிதும் உதவும். உங்கள் பிள்ளையோடு சேர்ந்து பாடுங்கள்; அவர்கள் பாடுவதைக் கேளுங்கள்; அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்.



**உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து விளையாடுங்கள்.**

நீங்கள் தமிழ்மொழி சார்ந்த விளையாட்டுகளைத் தேர்ந்தெடுத்து உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து விளையாடுங்கள். இவ்வாறான மொழி விளையாட்டுகளில் ஈடுபடுவதன்மூலம் உங்கள் பிள்ளைக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதோடு அவர்கள் தமிழ் குறித்தும் பண்பாட்டுச் செய்திகள் குறித்தும் அறிந்துகொள்ள உதவுவீர்கள்.



**தமிழ்மொழி கற்றலுக்குத் தேவையான வளங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தாருங்கள்.**

உங்கள் பிள்ளையைத் தமிழ்மொழி கற்றலில் ஈடுபடுத்துவதற்குப் பல வளங்கள் இருக்கின்றன. தமிழ்க் கதைப்புத்தகங்கள், ஒலிப்பகுதிகள், ஒளிக்காட்சிகள், இணையத்தள மொழி விளையாட்டுகள் முதலியவை அவற்றுள் சில. நீங்கள் இத்தகைய வளங்களைப் பயன்படுத்தித் தமிழ்மொழி கற்றலை மேலும் ஆர்வமிக்கதாக்க உதவலாம்.

**சிறு முயற்சியுடன் தொடங்குங்கள்.**

உங்கள் பிள்ளை நடைமுறைச் சூழலில் தமிழ்மொழியைக் கேட்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன்மூலம் தமிழில் இயல்பாகப் பேசுவதை ஊக்கப்படுத்துங்கள்.

**சமூக அமைப்புத் தளங்களைப் பயன்படுத்துங்கள்.**

சமூக அமைப்புகள் தமிழ்மொழியை வளர்ப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்கின்றன. உங்கள் பிள்ளையை இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தித் தமிழ்மொழியை அதிகம் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தாருங்கள்.



## உங்கள் பிள்ளையின் கேட்டல் திறனையும் பேசுதல் திறனையும் வளர்க்க நீங்கள் எவ்வாறு உதவலாம்?

உங்கள் பிள்ளையின் பேசுதல் திறனையும் கேட்டல் திறனையும் மேம்படுத்தத் தமிழ்மொழியில் கிடைக்கும் கற்றல் கற்பித்தலுக்கான வளங்களைப் பயன்படுத்துங்கள். மொழியைப் பயன்படுத்துவதற்கான இயல்பான சூழல்களை ஏற்படுத்தித் தாருங்கள். இவை உங்கள் பிள்ளையின் கேட்டல், பேசுதல் திறன்களை மட்டுமன்றிப் படித்தல், எழுதுதல் திறன்களையும் மேம்படுத்த உதவும்.

1

**பள்ளிப் பாடநூல்களை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.**

தமிழ்ப் பாடநூல்களில் கொடுக்கப்பட்டுள்ள படம் பார்த்துப் பேசுவோம் பகுதியிலுள்ள படங்களைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளையின் சொல்வளத்தைப் பெருக்க உதவுங்கள். அச்சொற்களைக்கொண்டு எளிய வாக்கியங்கள் அமைக்கவும் உதவுங்கள். பாடநூலில் காணப்படும் கதைகளைப்பற்றிப் பேச உங்கள் பிள்ளையை ஊக்குவிப்பதோடு அவர்தம் அனுபவங்களை வெளிப்படுத்தவும் உதவுங்கள்.

பட அட்டைகளைக்கொண்டு உங்கள் பிள்ளையுடன் மொழி விளையாட்டுகளில் ஈடுபடுங்கள். அப்பட அட்டைகளைப் பார்த்துத் தம் அனுபவங்களைத் தமிழில் கூற உங்கள் பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள்.

2

**பயிற்றுவளங்களைச் செம்மையாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.**

தேன் தமிழ் இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மின்னிலக்கப் பக்கங்கள், எழுத்துப்பலகை, மொழி விளையாட்டுகள் முதலியவற்றைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இவற்றின் துணையோடு தமிழ்மொழி கற்றலை உங்கள் பிள்ளைக்கு மகிழ்ச்சி நிறைந்த அனுபவமாக்குங்கள்.



3

**தமிழ் வானொலி நிகழ்ச்சிகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.**

பயனுள்ள, பொருத்தமான தமிழ் வானொலி நிகழ்ச்சிகளை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து நீங்களும் கேளுங்கள்.

4

**தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழுங்கள்.**

தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழுங்கள். பொருத்தமான, பயனுள்ள தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து உங்கள் பிள்ளையுடன் கண்டு மகிழுங்கள்.

5

**தமிழில் பேசுங்கள்.**

தமிழ் மீதான ஆர்வம் அதிகரிக்கத் தினமும் நடைமுறைச் சூழலில் இடம்பெறும் செய்திகளைப்பற்றியும் நிகழ்ச்சிகளைப்பற்றியும் உங்கள் பிள்ளையுடன் தமிழில் பேசுங்கள்.

## தமிழ் எழுத்துகளை அறிமுகப்படுத்துவதோடு உங்கள் பிள்ளையின் படித்தல் திறனையும் வளர்க்க நீங்கள் எவ்வாறு உதவலாம்?

**தமிழ்ப் பாடநூலை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.**

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படித்தலுக்கான சொற்களையும் தொடர்களையும் உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து நீங்களும் படியுங்கள். வாய்விட்டுப் படிக்க உங்கள் பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள்.

## பாட வளங்களை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

சிறுவர் கதைநூல்களை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து படியுங்கள். அவ்வாறு படிக்கும்போது கடினமான, புரியாத சொற்களை அடையாளங்கண்டு எளிய முறையில் உங்கள் பிள்ளைக்கு விளக்குங்கள். கதையில் வரும் கதாபாத்திரங்கள், கதையின் போக்கு, கதைக்கரு, விழுமியங்கள் ஆகியவற்றைப்பற்றிக் கேள்விகள் கேட்டு உங்கள் பிள்ளையுடன் கலந்துரையாடுங்கள்.

## கற்றலுக்கு ஏற்ற சூழலை உருவாக்குங்கள்.

உங்கள் வீட்டில் சிறிய நூலகம் ஒன்றை அமைத்துக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைக்கு ஏற்ற தமிழ்ப்புத்தகங்கள் எளிதில் கிடைக்கும்படி வையுங்கள். இது தமிழ்ப் புத்தகங்கள் படிப்பதற்கு உங்கள் பிள்ளையை ஊக்குவிக்க உதவும்.



## படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

தமிழ் படிப்பதற்கென நேரம் ஒதுக்குங்கள். உங்கள் பிள்ளையை வாரத்திற்கு ஒருமுறை நூலகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். உங்கள் பிள்ளையின் வயதிற்கும் விருப்பத்திற்கும் ஏற்ற தமிழ்ப் புத்தகங்களைத் தேர்ந்தெடுங்கள். முதலில் நீங்கள் வண்ணப்படங்களுடன் கூடிய எளிய தமிழ்க் கதைப் புத்தகங்களைப் பயன்படுத்துங்கள். சமூக நூலகங்களால் ஏற்பாடு செய்யப்படும் கதை சொல்லும் நடவடிக்கைகளில் உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து நீங்களும் பங்குபெறுங்கள்.





## உங்கள் பிள்ளைகள் கூறுவதைக் கேளுங்கள்.

உங்களுக்குத் தமிழ்மொழியில் பேசுவதற்குச் சிரமம் இருப்பினும் உங்கள் பிள்ளை படிப்பதையும் பேசுவதையும் ஆர்வத்தோடு கேளுங்கள்; அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

## உங்கள் பிள்ளையின் எழுதுதல் திறனை வளர்க்க நீங்கள் எவ்வாறு உதவலாம்?

**சிறிய வெண்பலகையைப் பயன்படுத்துங்கள்.**

உங்கள் பிள்ளை உங்களிடம் தான் கற்றதை எழுதிக்காட்டவும் நீங்கள் உங்கள் பிள்ளையிடம் எழுதிக்காட்டிக் கற்பிக்கவும் சிறிய வெண்பலகை உங்களுக்கு உதவும். அதை வீட்டில் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து எழுதிப் பழகுங்கள்.**

குறிப்பேடு ஒன்றில் சிறு குறிப்புகளை எழுத உங்கள் பிள்ளைக்குக் கற்றுக்கொடுங்கள்.

பெற்றோர்களாகிய நீங்கள் தமிழ்மொழியைக் கற்கவும் கற்பிக்கவும் கிடைக்கும் வாய்ப்புகளை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழி கற்றல் மகிழ்ச்சியான அனுபவமாக அமைய உதவுங்கள்.



# தமிழ்மொழி கற்றல் வளங்கள் பற்றிய தகவல்கள்

1. **'தேன் தமிழ்' பாடநூல் வரிசைக்குரிய தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்கள்**
   http://sangamam.moe.edu.sg/tamilosai/slot/u113/web/primary.html
   பள்ளிகளில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும் பயிற்றுவளங்களை இந்தத் தளத்தில் காணலாம்.

2. **கல்வியில் பெற்றோர் பங்கு**
   http://parents-in-education.moe.gov.sg/
   கல்வியமைச்சின் இணையத்தளமான இந்தத் தளத்தில் பெற்றோர் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவுவதற்குப் பயன்படும் தகவல்களும் வளங்களும் உள்ளன.

3. **தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழு**
   http://tamil.org.sg/
   பள்ளிக்கு அப்பாலும் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்பதற்காகச் சமூக அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை இந்தத் தளத்தில் காணலாம்.

4. **தமிழ் வாசிப்புக் குழு**
   http://www.nlb.gov.sg/golibrary/programme/read/61394/thangameen-readers_club.aspx
   தங்கமீன் மின் சஞ்சிகையைப் படிப்பவர்களால் அமைக்கப்பட்டுள்ள வாசிப்புக் குழுவைப்பற்றிய தகவல்கள் இந்தத் தளத்தில் இடம்பெற்றுள்ளன.